# சம்மாந்துறை பிரதேச சபையின் 06 வது பொது கூட்டறிக்கை 2018.08.14

சம்மாந்துறை பிரதேச சபையின் 06 ஆவது அமர்வு 2018.08.14 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 03. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 05. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்

| | | |
|---|---|---|
| 01. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 06 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

நமது கௌரவ உப தவிசாளர் V. ஜெயச்சந்திரன் அவர்கள் மான்புமிகு ஜனாதிபதியின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றுள்ளதனால் கூட்டத்திற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு லீவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவஉறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவஉறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் அதிகாரத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். உங்களில் சிலர் அறிந்திருப்பீர்கள் நமது சபைக்கு உள்ளூராட்சி சபைகளின் சட்டத்தில் 19 வது சரத்தின் படி சபையின் ஊழியர்களை உள்ளூராட்சி சேவை சட்டத்தின் கோப்புகளுக்கு அமைய நிரந்தர உத்தியோகத்தர்களைத் தவிர உழியர்களை நியமிக்கின்ற அதிகாரம் பிரதேச சபைக்குத் தான் இருக்கின்றது. நமது நாட்டின் 13 வது திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சியின் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட போது அதில் பிரதேச சபையின் அதிகாரங்கள் மாகாண சபையினால் எந்த விதத்திலும் குறைக்கப்பட முடியாது என தெளிவாக கூறப்பட்டுள்ளது. கூட்டலாமே தவிர குறைக்க முடியாது.

அப்படி இருந்தும் சென்ற காலங்களில் மாகாண சபையினால் ஊழியர்களை நியமிப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. நாங்கள் அதனை கடுமையாக எதிர்த்ததனால், சபைகள் கலைக்கப்பட்ட பின் செயலாளருடன் இணைந்து சட்டத்திற்கு அமைவாக 10 சுகாதார தொழிலாளர்கள் பதிலீட்டு அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். இன்றும் அவர்கள் அவ்வாறே இருக்கின்றனர்.

ஆனால் இம்முறை ஆளுனரின் ஆனையின்படி 03 சுகாதாரத் தொழிலாளர்கள் நிரந்தர நியமனங்கள் செய்யப்பட்டுள்ளார்கள். இதனை சகல சபைகளும் எதிர்க்கின்றது. இது எனது தனிப்பட்ட விருப்பம் அல்ல சபையின் அதிகாரத்தை மாகாண சபை எடுப்பது. இதற்கு எந்த சபையும் இடமளிக்க முடியாது. அந்த வகையில் நாங்கள் இதனை நீதிமன்றத்திற்குப் போயாவது நிறுத்த வேண்டும். எல்லா சபைகளும் அந்த முடிவில்தான் இருக்கின்றது.

அண்மையில் கல்முனை மாநகர சபையில் 10 பேர் நியமிக்கப்பட்ட போது அவர்கள் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து பின்னர் ஆளுனர் அவர்களைச் சந்தித்து பேசினார்கள். அந் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட வில்லை. அப்படியே இருக்கின்றது. இந்த சபையைப் பொறுத்தமட்டில் அந்த வழிமுறையை, அதாவது ஆர்ப்பாட்டம், தொழிற்சங்க நடவடிக்கை போன்ற தேவை இல்லை. இன்று கூட நமது ஊழியர்கள் கறுத்தப் பட்டி அணிந்துகொண்டு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்று வேலை முடிந்ததும் நமக்கு ஒரு மஹஜர் தருவதாக இருக்கின்றார்கள். ஆனால் இதற்கு அப்பால் சபை என்ற ரீதியில் நாம் பிரதேச சபையின் அதிகாரங்களை நமது நாட்டின் அரசியல் யாப்புக்கு மாறாக மாகாண சபை தலையிடுவதை, அதன் அதிகாரத்தைச் செலுத்துவதை நாம் எப்போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இதனை எதிர்க்கின்றோம். என்ற ஒரு நிலையை நாம் எடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் உரிய காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அதிகாரத்தை தனி ஒரு நபரின் கைகளில் வழங்கியது. மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் அதிகாரங்களை பரவலாக்குவது. ஆனால் இன்று அந்த முறை கேள்விக்குறியாக்கப்பட்டு தனி ஒரு நபரின் கைகளிலே அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளது.

எனவே, முதலாவதாக நாங்கள் ஒரு பிரேரனையைக் கொண்டுவர வேண்டும். மாகாண சபை தேர்தலை உடனடியாக நடாத்த வேண்டும் என்றும், பிரதேச சபைக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு

நியமனங்கள் வழங்குகின்ற அதிகாரங்களை தனியே ஆளுனரிடத்தில் கொடுக்காமல், கொடுக்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்யுமாறும் நாங்கள் இந்த சபையில் ஏகமனதான ஒரு பிரேரனையை நிறைவேற்ற வேண்டும் என்று நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆளுனரின் செயலாளரினால் வழங்கப்பட்டிருக்கும் நிரந்தர நியமனங்கள் அரசியல் யாப்புக்கு முரணானது. உள்ளுராட்சி சபைகளின் சட்டத்திற்கும் முரணானது. அதனை இந்த சபை எதிர்க்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போன்று எந்த ஒரு சட்ட முரணான ஏற்பாட்டுக்கும் நாங்கள் துனை நிற்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏனென்றால் இந்த சபை முடிவுற்று புதிதொரு சபை வருகின்ற போது நமது சபைக் காலப்பகுதியில் இவ்வாறான சட்டங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டது. என்ற வரலாறு மீதப்படுத்தப்பட வேண்டிய முக்கியமானதொரு விடயமாக இருந்துகொண்டிருக்கின்றது.

எனவே, என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் ஏகமனதாக நாங்கள் அவ்வாறான விடயங்களை நிராகரிக்கின்றோம். என்பது எனது கருத்தாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 13 வது அரசியல் யாப்பில்தான் உள்ளுராட்சி அரசியல் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது எமக்குக் கிடைத்த அதிகார வரம்பு எல்லை. நியமனம் கொடுத்தவரை எதிர்ப்பதாக இல்லாமல் எங்களது சட்டங்களை நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது.

எங்களது சபையில் நிரந்தரமற்ற ஊழியர்கள் இருக்கின்ற போது, அவர்கள் அனைவருக்குமான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிகாகரித்தது மட்டுமல்லாமல் இந்த சபையையை கௌரவிக்காமல் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதென்றால் உண்மையில் எமது உறுப்பினர்கள் எவரும் இதனை ஆதரிக்க வில்லை. இருக்கின்ற நமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்கக்கூடாது.

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல் நாங்கள் அனைவரும் சேர்ந்து இதனை எதிர்ப்பதாகவும் அதே போல் இங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களையும் நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சபையின் தீர்மானத்தில் ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும்.

அத்தோடு மீண்டும் நியமனங்கள் வழங்கும் போது சபையின் அனுமதியுடன் வழங்க வேண்டும். காரணம் வருமானத்தைப் பெற்று செலவு செய்யும் உரிமை நமது சபைக்கு உண்டு. அப்படி இருக்கின்ற போது இவ்வாறான நியமனத்தை நான் எதிர்க்கின்றேன். என்பதனை இந்த சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று மாகாண சபையினால் எமது உள்ளராட்சி மண்றங்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும் நோக்காக நிரந்தர நியமனங்களை கௌரவ ஆளுனர் அவர்கள் வழங்கியிருப்பது எமது சட்டத்திற்கு முரணானது. எனவே எமது அதிகாரத்தை பறித்தெடுக்கும் நோக்காக இவ்வாறான திட்டம் மேற்கொள்ளப்பட்டமையை வண்மையாகக் கண்டிக்கின்றேன்.

அதே போல் எமது சபையும் குறிப்பாக 47 ஊழியர்களுக்கும் அதிகமானவர்கள் இன்று தற்காலிகமாக வேலை செய்கின்றார்கள். அவர்கள் மிகவும் கஸ்டத்திற்கு மத்தியில் வேலை செய்கின்றார்கள். அவர்களையும் உடனடியாக நிரந்தரமாக்கும் திட்டத்தை அமுல் படுத்த

வேண்டும். அதற்கான உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் எல்லோரினதும் கருத்துக்களை உள்வாங்கியவனாக,

**தீர்மானம் 02**
ஸ்ரீ லங்கா சோசலிச நாட்டின் அரசியல் யாப்பின் 09 வது அட்டவணையின் 4.3 பிரிவிற்கு முரணாக உள்ளூராட்சி சட்டத்தின் 19 வது சரத்திற்கு முரணாக மட்டுமல்லாமல் மாகாண சபையினாலே விடுக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் அலுவலக பணியாளர் சேவை ஆரம்ப நிலை தேற்சியற்ற பதவி ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாகவும், கௌரவ கிழக்கு மாகாண ஆளுனர் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக சம்மாந்துறை பிரதேச சபைக்கு நிரந்தர சுகாதார தொழிலாளி தரம் III பதவிக்கு மூவரை நியமித்ததை இந்த சபை ஏகமனதாக நிராகரித்து, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் வகையில் மாகாண சபையின் நிர்வாகம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், ஜனநாயக ரீதியான ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கு கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடாத்த வேண்டும் என்று இந்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது பகுதி அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை சென்ற கிழமை நமது சபை ஏற்படுத்தியது. அரசின் கௌரவ நகர திட்டமிடல் நீர் வழங்கள் அமைச்சர் அவர்கள் அவரின் ஊழியர்களோடு சபைக்கு வருகைதந்து, சபைக்காக அமைச்சினால் செய்யப்படும் வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்தது மட்டுமல்லாமல், ஊரின் அபிவிருத்திக்கு திட்டமிடல் அம்சமாகவும் அவர் நமது சபைக்கு வந்து எம்மை கௌரவித்ததற்காக சபையின் சார்பாகவும் உங்கள் சார்பாகவும் நன்றி கூறியவனாக, அதனை ஏற்படுத்திய கௌரவ ஊறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறியவனாக,

இன்று எமது செயற்பாட்டில் குறைபாடுகள் இருக்கின்றன. அக்குறைபாடுகளை பெருமனதோடு ஏற்றுக்கொண்டார். அவற்றை எப்படியாவது நிவர்த்தி செய்ய வேண்டும். உண்மையாக சட்டப்படி அவைகள் நிராகரிக்க வேண்டும். ஆனால் அவைகளை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விஜயம் செய்ததற்கு மீண்டும் அவருக்கு நன்றி கூறியவனாக,

எதிர்காலத்தில் நான் கௌரவ உறுப்பினர் அனைவரிடமும் வேண்டிக் கொள்வது, இன்று நமது ஊரை ஒரு நகர சபையாகவும் பிரதேச சபையாகவும் பிரிப்பதா? அல்லது முற்று முழுதாக நகரசபையாக்குவதா? என்ற ஒரு வாதம் மஜிலிஸ் அஸ்ஸுறா மட்டத்திலும், பகிரங்கமாகவும் பேசப்படுகின்றது. நாம் இந்த ஊரை நகரமாக பார்க்க வேண்டும் என்றால் நகர இலட்சனம் இல்லாத பகுதிகளை நாம் முன்னோக்கி அந்தப்பகுதிகளை அதன் தரத்திற்கு கொண்டு வருவதற்கு ஒட்டு மொத்தமாக வேலை செய்ய வேண்டும்.

நாம் ஏதாவது அபிவிருத்தித் திட்டங்களை கொண்டு வரும் போது சம்பூரணமான ஒரு பகுதியை எடுத்து அந்தப் பகுதியை நாம் முன்னேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். உதாரணமாக, நாம் பைனன்டகாட்டை மையமாக வைத்து ஏதாவது ஒரு வேலைத்திட்டம் செய்வதென்றால் அந்தப் பகுதிகளில் நமக்கு முடியுமான வரை அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வோமானால் அந்தப்பகுதி முடிந்து விட்டது என்பது நமக்குத் தெரியும்.

இந்த சபை உருவாவதற்கு முன் ஒரு நகர சபை இருந்தது. அந்த நகர சபையின் எல்லை அலிவன்னியார் வீதிக்கு அண்மையில் இருந்தது. அதற்கு தெற்கே கிராம சபை இருந்தது. இப்போது கிராம சபையின் ஏறத்தாள 30, 40 வீதமான பகுதி நகரமாக மாறிவிட்டது. அப்படியானால் அதற்கு அன்மித்த பகுதிகளை நாம் விரைவில் அதே தரத்திற்கு கொண்டு வந்து அதன் பரப்பில் கொண்டு போவோமானால் சம்மாந்துறையின் பட்டன சபையும் சம்மாந்துறையின் கிராம சபையின் எல்லைகள் பூர்தியான பின்பு மல்வத்தை, வளத்தாப்பிட்டி கிராமங்களை ஒரு கிராமமாக ஒட்டு மொத்தமாக பார்த்து அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவதற்கான நோக்கில் நாம் சிந்திப்போமேயானால் நன்றாக இருக்கும்.

3, 4 மாத காலமாக 200 க்கு மேற்பட்ட Estimate இந்த சபையினால் உங்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்காக எல்லோருக்கும் வழங்கப்பட்டு இன்று 08 ஆம் மாதம் 02 கிழமை போய்விட்டது. வேலைகளை ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டால் அதற்கான பணத்தை பெறுவதற்கும் காலதாமதம் ஏற்படலாம். இவைகளையும் உள்வாங்கி கலந்துரையாடலுடன் வேலைகளை செய்து வந்தால் நன்று.

உங்களின் அறிவிற்காக, கொழும்பில் சில காலங்கள் இருக்கக்கூடியவர்கள் நிச்சயமாக ஊரின் சரித்திரத்தைப் படிக்க வேண்டும். “Archives” (காப்பகம்) நாட்டின் சரித்தரங்கள் அடங்கிய விபரங்கள் இருக்கின்ற இடம்தான் இது. சினமன் காடுன் பொலிஸ் நிலையத்திற்கு முன் உள்ளது. எவரும் போக முடியும்.

1992 ஆம் ஆண்டு இந்த ஊரின் எல்லை மாற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் அதனைப்பற்றி எந்த சபையிலும், எந்த இடத்திலும் பேசப்பட வில்லை. இன்று 2018 ஆம் ஆண்டு அதனைப்பற்றி பேசுகின்றோம். நிர்வாகிகளிடம்தான் இதன் முடிவுகள் வருகின்றது. அவர்கள் மக்கள் பிரதிநிதிகளை ஒழுங்காக வழி நடாத்தியிருந்தால் பிரச்சினை வந்திருக்காது. அதனால்தான் சரித்திரம் தெரிந்து கொள்வது நமக்கு முடிவெடுப்பதற்கு இலகுவாக இருக்கும்.

பாதைகளுக்கு பெயரிடுவதற்கு நான் ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களிடமும் கேட்டுக் கொண்டது உங்களது வட்டாரத்திற்குள் இருக்கின்ற பிரமுகர்களை உள்வாங்கி உங்களது தலைமையில் வட்டாரத்திற்குள் இருக்கின்ற பாதைகளின் தற்போது இருக்கும் பெயர்கள், இல்லாதவற்றுக்கு உங்களது சிபார்சுகளை செய்து நீங்கள் வழங்கினால் ஊருக்கென்ற ஒரு பெரிய சபையை உருவாக்கி வேலைகளை இலகுபடுத்த முடியும். ஒரு சபையை உருவாக்கி எல்லாவற்றையும் செய்தால் அவை காலதாமதமாகும். தயவு செய்து அதற்கு காலத்தை செலவு செய்து செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முதல் தர வேண்டும். ஓவ்வொரு கிழமையும் எமது சபையின் செயலாளர் Remainder அனுப்புவார். தயவு செய்து அதனை அற்பனிப்போடு செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

By Laws (விதிமுறை) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஓவ்வொரு சபையினாலும் பொதுவாக நிறைவேற்றப்படுவது Hotelகள், பேக்கரிகள் போன்றவை நடாத்தும் விதிமுறைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. அதனைப் படித்துக் கொள்ளுங்கள்.

**தீர்மானம் 03**

சென்ற மாதம் 02.07.2018 தொடக்கம் 31.07.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் தரப்பட்ட Document இல் List of Vehicle Machineries க்கு ஒரே ஒரு டயர் Quotation கிடைத்துள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Documentaion ஐப் பார்த்தால் எல்லாம் இருக்கின்றது. அனைத்து டயர் கடைகளுக்கும் நேரடியாக அனுப்பப்பட்டுள்ளது. இது எனது தலைமையில் செய்யப்படும்.

**தீர்மானம் 04**
எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு 07 நாட்களுக்கு மணிக்கூட்டுக் கோபுரம், பொதுச் சந்தை, அலுவலகம், அப்துல் மஜீட் மண்டபம், அமீர் அலி சிறுவர் பூங்கா போன்ற இடங்களில் மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹஜ்ஜுப் பெருநாள் சம்பந்தமாக 07 நாட்களுக்கு சுற்று வட்டத்தை மின் விளக்குகளால் அலங்கரிப்பது அதற்கான செலவு 34,000.00. ஹஜ்ஜுப் பெருநாள் என்பது இஸ்லாமிய அடிப்படையில் தியாகத் திருநாள். தியாகங்கள் செய்து இந்த பிரதேச சபையை உருவாக்கித்தந்த மக்களுக்கு இந்த நேரத்தில் தியாகங்கள்தான் செய்ய வேண்டும். வீண்விரயங்களைத் தவிர்த்துக் கொள்வது எனது கருத்து மட்டுமல்ல இஸ்லாத்தின் கோட்பாடும் அதுதான்.

அதன் அடிப்படையில் இஸ்லாத்தை வைத்து ஹஜ்ஜுப் பெருநாளைக்கு மின்விளக்குகளால் அலங்கரிப்பதென்பது இஸ்லாமிய நடைமுறையில் அல்லாத ஒரு சம்பவம். அதன் உண்மையான நிகழ்வு என்னவென்றால் இப்றாஹீம் (அலை) அவர்களது மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப்பலியிட கணவு கண்ட தியாகத்திருநாள். எனவே அதற்காக தியாகங்கள் செய்ய வேண்டுமே தவிர வீன் விரயமான செலவை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஊரை அலங்கரிப்பது தொடர்பாக, இவ்விடயத்தை மதத்துடன் சம்பந்தப்படுத்தாமல் ஊர் என்ற ரீதியில் பெருநாளாக இருப்பதனால் அதனை அலங்கரித்து சிறப்படையச் செய்வது நன்று என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் பல்லின மக்கள் வாழ்கின்ற நாட்டில் வாழ்பவர்கள். ஒவ்வொரு மதத்தவரும் அவரவர் பண்டிகைகளை அடையாளப்படுத்தும் வகையில் செய்கின்றனர். அந்தவகையில் இதனைச் செய்வது நல்ல விடயம் என்பது எனது கருத்தாகும். இதில் சிறு பிள்ளைகளின் மகிழ்ச்சியும் உள்ளது. இதனை கண்டிப்பாக ஒவ்வொரு வருடமும் நடாத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மின்விளக்குகள் பொருத்துவது களியாட்டமாக அல்ல ஒரு அடையாளமாக காட்சிப்படுத்துவதற்காக. இது இஸ்லாமிய பெரும்பான்மை மக்கள் வசிக்கின்ற கிராமம். இது ஒரு பெருநாள் தியாகத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் பாரம்பரியமான விடயம். இதனை பொது நோக்காக் கொண்டு நமது ஊரை குறுக்கறுத்துச் செல்பவர்கள் கூட விளங்கிக் கொள்ளலாம். இந்த ஊரில் ஏதோ ஒரு விசேட நிகழ்வு நடக்கின்றது என்ற

அடையாளமே தவிர, ஒரு கொண்டாட்டமல்ல. இது மக்களுக்கு ஒரு மகிழ்சியை உருவாக்ககின்ற ஒரு விடயம்தான்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மின் விளக்கு போடுவது ஊருக்கு வெளிச்சமாகத்தான் இருக்கின்றது. நமது ஊரைக் குறுக்கறுத்துச் செல்லும் போது இங்கு ஏதோ ஒரு பண்டிகை நடைபெறுகின்றது என்பதனை உணர்ந்து கொள்ள முடியும். நீங்கள் அறிந்திருப்பீர்கள் முஸ்லிம் ஏரியா என்பதற்கு மின் விளக்குகளை எடுத்துக் கொள்ளலாம். அதே போல் சிங்களப் பிரதேசங்களில் புது வருடங்களின் போது தான தன்சல் போன்ற விடயங்கள் சிங்களவரின் பிரதேசம் என அடையாளப்படுத்தலாம். எனவே இது நமது ஊரை அடையாளப்படுத்துவதற்கும், அழகு படுத்துவதற்குமான விடயமாகும்.

அதுமட்டுமல்ல எனது கருத்து பாரம்பரிய விளையாட்டுக்களையும் கொண்டுவர வேண்டும். அந்தவகையில் வண்டில் ஓட்டம், திறீபுள், சாடி, சடுகுடு, தலையனை அடித்தல் போன்ற விளையாட்டுக்களை நடாத்த வேண்டும். முடியுமானால் நமது மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களை உட்படுத்தி, நமது சபையூடாக செய்தால் வெளியூர் மக்களும் நமது ஊருக்குள் வந்து பார்வையிடுவார்கள். மக்களுக்கும் ஒரு மகிழ்ச்சியாக இருக்கும். இதனை சபையூடாக நமது ஊரில் செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் முன்வருவார்களானால் நிச்சயமாக இதனை உங்கள் தலைமையில் செய்யலாம். உண்மையாக பாரம்பரியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். அதனை சபை அங்கீகரிக்கின்றது.

**தீர்மானம் 05**
எமது சபைக்குச் சொந்தமான ZA-5416 இலக்க (Motor Grader) வாகனத்தின் பிளேட் மாற்றுதல், புள் சேவிஸ் செய்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**Compactor** கூடுதலான பாவனையில் உள்ள வாகனம் ஒரு நாளைக்கு அது வேலை செய்யாவிட்டால் 06 அல்லது 08 Tractor Load வேலை நிற்கின்றது. அதற்குரிய டயர் மாற்றுவது. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் இதன் நடைமுறைகள் மாற்றப்பட்டு அனைவரினதும் கருத்துக்களையும் உள்வாங்கி அதன் பனியை நான் பாரம் எடுத்திருக்கின்றேன். அதனை செயற்படுத்துவேன்.

**தீர்மானம் 06**
எமது சபைக்குச் சொந்தமான LI-3269 இலக்க Compactor வாகனத்திற்கு டயர், டியுப் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 07**
சபை அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் 30 மேசை, மடி கணனிகளுக்கு தேவையான Anti Virus களை கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 08**
காரைதீவற்கு திண்மக்கழிவு நிலையத்திற்கு திண்மக்கழிவினை வழங்குவதற்கு மீண்டும் 03 மாத காலத்திற்கு நீடிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
VTA, Technical College, SLIATE Trainees நமக்கு ஒரு சவாலாக உள்ளது. அவர்கள் பயிற்சி செய்ய வேண்டும். இதற்கு அனேகமான பிள்ளைகள் வருகின்றனர். நாம் எல்லோருக்கும் பயிற்சி கொடுக்கலாம். ஆனால் கொடுப்பனவு வழங்க முடியாது. பயிற்சி கொடுப்பதானாலும் ஆளணியில் 10 வீதத்திற்குள்தான் கொடுக்க முடியும். நமக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 69 என்றால் 06 அல்லது 07 பேருக்குத்தான் வழங்க முடியும்.

அதற்கு ஏதாவது தகைமையை உருவாக்கி கொடுப்பனவு வழங்க முடியும். காரணம் வசதி உள்ள பிள்ளைகளும் வருகின்றனர். வசதியற்ற பிள்ளைகளும் வருகின்றனர். சமுர்த்தி பெறுபவர்களுக்கு கொடுக்க வேண்டுமா? என்று உங்களது கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்லூரியில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு கண்டிப்பாக இப்பயிற்சி நெறி அவசியமானதொன்று. ஏனென்றால் எதிர்காலத்தில் அவர்கள் மற்ற தொழில்களுக்கு செல்வதென்றால் அவ்வாறான வேலை செய்கின்ற ஆவணங்கள் தேவைப்படுகின்றன. இன்று எமது ஊரைப் பொ்றத்தவரையில் சமுர்தி அடிப்படையிலான ஒரு திட்டங்களையும் வகுக்க முடியாது. காரணம் சமுர்தி பெறத் தகுதியற்றவர் கூட சமுர்த்தி பெற்று வருகின்றனர். அதே போல் அங்கு தரப்படுகின்ற தரவுகள் அடிப்படையிலும் நாங்கள் அந்த முடிவை எடுக்க முடியாது.

நீங்கள் கூறியது போல் வறுமையின் கீழ் வாழ்கின்ற பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்காக, அவர்களைத் தெரிவு செய்வதற்கு அனுமதிப்பதற்காக எமது கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் உள்வாங்கியவனாக. இதில் உள்ள குறிப்பிட்ட சில உறுப்பினர்களை ஒரு குழுவாக ஏற்படுத்தி அவர்களின் தெரிவில் மாணவர்களை உள்வாங்க எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் சமுர்த்தி லாபிகள், தவிசாளர் கொண்டு வருபவர் என்ற வேறுபாடுகள் இல்லாமல் குழு ஒன்றை அமைத்து அவர்களை இணங்கானுவது சிறப்பாக இருக்கும். அப்படியானவர்களை பயிற்சிக்கு உள்வாங்கினால் வறுமையும் ஒழிக்கப்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகையாக இருக்கும். என எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்விக்கு ஏற்றம் தாழ்வு இல்லை. நமது சபையைப் பொறுத்தவரையில் மற்ற சபைகளை விட வேலை அதிகம் உள்ளது. அதே நேரம் அவர்களுடாக அதிகமான வேலைகளைப் பெற்றுக்கொள்ளலாம். சபைக்கு வருபவர்களுக்கு நமது ஊர் மக்களிடம் இருந்து வருகின்ற வளத்தின் மூலம் அவர்களுக்கு சிறு தொகை கொடுப்பனவு யாராக இருந்தாலும் கொடுக்கலாம். நீங்கள் கூறியது போல் 06/09 பேர் என்ற அடிப்படையில் வருபவர்களை சபை விரும்பினால் குழு ஒன்றை அமைத்து அதனை ஏற்ற தாழ்வில்லாமல் தெரிவு செய்து அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கலாம். ஒற்றுமைப்பட்ட உறுப்பினர்களாகிய நாம் தகைமை அடிப்படையில் தெரிவு செய்து அவர்களிடம் அதிகமான வேலைகளையும் வாங்க வேண்டும். அவர்களுக்கும் இரண்டு முறையில் நன்மைகிடைகின்றது. பண்முகப்படுத்தப்பட்ட வேலைகள் இங்கு உள்ளது. எனவே அவர்களால் உச்ச பயனை அடைய முடியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நானும் தனிப்பட்ட முறையில் முடிவு எடுக்க முடியாது. காரணம் இதனால் பல அழுத்தங்கள் வருகின்றது. இதனை இரண்டு விதமாக பார்க் முடியும் உத்தியோக பூர்வமாக 06 பேர் எடுக்கலாம். அவர்களுக்குத்தான் பணம் வழங்க முடியும். 06 பேர்களின் தகைமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் வறுமைக் கோட்டில் வாழ்பவராக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு கொடுப்பனவு இல்லாமல் எடுக்க முடியும்.

கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி, கௌரவ உறுப்பினர் நளீம் இவர்களின் தலைமையின் கீழ் கொடுப்பனவுக்குரிய ஆட்களை நீங்கள் தெரிவு செய்து சிபார்சு செய்ய வேண்டும். அரசியலுக்கு அப்பால் வறுமையில் உள்ளவர்களுக்கு உண்மையாக உதவ வேண்டிய பொறுப்பு நீங்கள் தான். மற்றவர்களை நாங்கள் தெரிவு செய்வோம். இது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காகத்தான்.

**தீர்மானம் 09**
தகைமை அடிப்படையில் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படும் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 10% பயிற்சியாளர்களுக்கு கொடுப்பனவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கலாபூசனம் மாறன் மதிப்பிற்குரிய சைன் Sir அவர்களின் கடிதம். இதனை ஏற்கனவே செய்திருக்க வேண்டும். அதாவது இதனை சுருக்கமாக கூறுகின்றேன். ஆவணங்கள் காப்பகம் பூத்தது போல் சமூக கலை கலாசார சங்கமம் பூர்த்து மலர்ந்து வரலாறு குறிக்க வேண்டும். இது மந்த நிலையில் இருக்கின்றது. இதற்காக அர்ப்பனித்தவர்கள், தியாகம் செய்தவர்கள் போன்றவர்களின் வரலாறு தொடர்பான ஆவணங்கள் பேனிப் பாதுகாக்கப்பட்டு வருவது அவசியமானதாகும். இதற்காக எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

கலாபூசனம் அவர்கள் குறிப்பிடும் போது ‘‘சமூக கலாசார சங்கமம் அல்லது பிரதேச சபை சமூக கலாசார சங்கமம் என்ற ஏதாவது ஒரு பெயரில் ஓர் அமைப்பினை சமர்ப்பனம் செய்து இயங்கிவர வேண்டியது காலத்தின் தேவையாகும். இக் கோரிக்கையை கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு இதற்கான தீர்மானத்தை எடுக்குமாறு மகவும் பனிவுடன் வேண்டி இறைஞ்சுகிறேன். இது தொடர்பான விளக்கங்களை என்னிடம் பெற வேண்டியிருப்பின் இதற்கு நானும் ஆயத்தமாக இருக்கின்றேன்.’’

இந்த நடவடிக்கை பிரதேச சபைகளின் பொறுப்பில் ஒன்று கலாசார விழுமியங்களை பாதுகாத்தல். இதனை எவ்வாறு செயற்படுத்தலாம் ஏறத்தாள 2013 ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தில் காப்பகம் ஆரம்பிக்கப்பட்டு பிரதேச சபையில் இருக்கின்றது. அனைத்து பழைய புத்தகங்களும் இருக்கின்றது. அதே போல் வருகின்ற ஒக்டோபர் மாதம் மீண்டும் வாசிப்பு மாதம் மிகவும் கோலாகலமாக நடாத்த வேண்டும் என்ற பிரார்த்தனை இருக்கின்றது. அது இங்கு மட்டுமல்ல சம்மாந்துறையின் அமீர் அலி பொது நூலகம், மல்வத்தை நூலகம் இரண்டு இடங்களில் நடாத்த உத்தேசம் உள்ளது. அந்த நேரம் அதில் ஒரு அம்சமாக இதனையும் செய்யலாம். என்ற ஒரு அபிப்பிராயம் இருக்கின்றது. இதனை வாசிப்பு மாதத்தில் ஒரு அம்சமாக எடுத்து இலக்கியத் தொடர்பாடல் உள்ளவர்களையும் அழைத்து, கௌரவ உறுப்பினர்களின் பங்களிப்போடு இதனை செய்வதற்கு இந்த சபை முடிவு எடுத்ததாக,

Accrogrup அவர்களிடம் Tractor Trailor இருக்கின்றது. அவர்கள் ஒரு வேண்டுகொள் விடுத்திருக்கின்றனர். அதனை சபையின் தேவைக்காக பயன்படுத்துமாறு கூறி Agreement செய்து எடுக்குமாறு கூறியிருக்கின்றார்கள்.

அதனை செய்ய முடியும். ஆனால் இதற்கு எவ்வளவு தொகை வழங்க முடியும்? என்ற ஒரு கேள்வி இருக்கின்றது. கச்சேரியில் ஒரு நாளைக்கு 6000 கொடுக்கின்றனர். அதில் சாரதி டீசல் செலவுகள் அனைத்தும் போனால் 3000 ரூபா அல்லது 2800 ரூபா மீதியாகும். 2800 ரூபா ஒரு நாளைக்கு Tractor Trailor கொடுத்து பாவிக்க நமது சபைக்கு முடியாது. அப்படி எடுப்பதா? அல்லது எடுப்பதானால் எவ்வளவு எடுக்கலாம்? இது ஒரு சங்கம் என்றாலும் மற்றவர்களும் அவர்களது Tractor Trailor களை எடுக்குமாறும் கூறுவர். அப்படியானால் நாம் பொது அறிவித்தலை கொடுத்து Quotation மூலம் எடுக்கலாமா? என்ற உங்களது கருத்துக்ளை கூறலாம்.

கான்கள் துப்பரவாக்குவதற்கு இதன் தேவைப்பாடு உள்ளது. 8, 9 இலட்சம் செலவு செய்து 02 Tractor Trailor திருத்தி எடுத்துள்ளோம். நான் Minister இடமும் 02 Tractor கேட்டுள்ளேன். வழமையாக சபை மூலம் எங்களது கான் துப்பரவு செய்யப்படும். ஆனால் தற்போது இஸ்தம்பிதப்பட்டு காணப்படுகின்றது. அதற்குக் காரணம் Tractor இன்மை, ஊழியர் இன்மை. இதற்கு விளம்பரம் கோரி Tractor Trailor நாளாந்த அடிப்படையில் எவ்வளவுக்கு எடுக்கலாம்? சாரதி, டீசல் சபையினால் வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Tractor Trailor புதுசு என்றால் நமக்கு இலகுவாக இருக்கும். நாம் நமது சபையினால் ஒரு தொகையைக் கூறுவோம். அதற்கு அவர்கள் ஒத்துழைத்தால் கொடுக்கலாம். இல்லையென்றால் அனைவரும் தருவதற்கு முயற்சிப்பார்கள்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 1200ரூபா அல்லது 2000 ரூபா என்று கூறுவது அதற்கு செய்கின்ற செலவுக்கு போதாது. ஒரு தடவை போய்வந்தால் 2000 ரூபா சேர்க்கின்றனர் டயர், வாகனத்தின் ஒயில் மாற்றம், பெச் போடுவது போன்ற செலவுகளையும் பார்க்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம் றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2000 ரூபாவைக் குறைத்து மாதம் ஒன்றுக்கு 40,000 ரூபா அல்லது 45,000 ரூபா எடுக்க முடியும்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு Quotation Call பன்னலாம். இது புதிய Tractor Trailer ஒரு சங்கத்திற்குரியது. எதுவித வேலையும்மின்றி இருப்பதால் சபைக்குக் கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும். அவர்களும் நியாயப்படுத்தியதாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அனுபவத்தில் கண்ட உண்மை. நாங்கள் அம்பிலான்ஸ் ஒன்றை நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியிருந்தோம். அவர்கள் அதனை Maintain பன்ன முடியாமல் 40,000 ரூபாவிற்கு நிறுவனம் ஒன்று அம்பிலான்ஸ் வழங்கியுள்ளார்கள். டயர், ஒயில் போன்ற திருத்தங்கள் எல்லாம் அவர்கள்தான் செய்கின்றனர். எனவே, 40,000 ரூபா நியாயமான பணம். நமது ஊரில் இந்த சங்கம் ஒரு முன்மாதிரியான சங்கம் அவர்களை ஊக்கவிப்பதாகவும் இருக்கும். 40,000 ரூபா சாத்தியமானதாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஊக்குவிப்பாக ஒரு மாதத்திற்கு எடுத்துப் பார்க்கலாம் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டால் ஒரு வருடத்திற்கு எடுக்கலாம்.

**தீர்மானம் 10**
Agro group இனரின் Tractor Trailer ஐ மாதாந்த வாடகைக்க ரூபா 40,000 இற்கு பெற்றுக் கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம் ஜிப்ரி |

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையிலுள்ள VAT வரி அறவீட்டை இல்லாமல் செய்தல். சம்மாந்துறை ஒரு பிரதேச சபையாக இருக்கின்ற நிலையில், மாநகர சபைகளில் கூட இடம்பெறாத வரி அறவீட்டுத் திட்டமொன்று இச் சபையால் நடைமுறைப்படுத்தப்படுவதானது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயற்பாடாகும்.

அதாவது எமது பிரதேச சபையினால் அறவிடப்படுகின்ற VAT வரி அறவீட்டு முறைமையானது எமது மக்களை சிரமத்துக்குள்ளாக்குகின்ற ஒரு செயற்பாடாகும். அத்துடன், எமது பிரதேச சபையினால் இவ்வூரில் இருக்கின்ற மக்கள் எந்தவொரு தேவைக்காகவும் செலுத்தப்படுகின்ற கட்டணத்திற்கு 15% VAT வரி அறவிடப்படுகின்றமை இச்சபைக்கும் 100% பிரயோசனமற்றதாகும்.

எமது ஊரைச் சூழவுள்ள பிரதேச சபைகளான இறக்காமம், நாவிதன்வெளி, காரைதீவு போன்றவற்றிலும் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையைவிட வருமானம் கூடிய கல்முனை மாநகர சபையிலும்கூட இல்லாத ஒரு வரி அறவீட்டு முறைமையை சம்மாந்துறை பிரதேச சபை நடைமுறைப்படுத்துவதானது எமது மக்களை சிரமத்திற்குள்ளாக்கும் மனிதாபிமானமற்ற ஒரு செயற்பாடாகும் என்பதை வலியுறுத்துவதுடன் இந்த நடைமுறையினை இல்லாமல் செய்யுமாறு இச்சபையின் அங்கீகாரத்தை வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை உள்வாங்கியவனாக, இதில் உள்ள விடயம் VAT வரி அறவீடு என்பது சட்டத்தினால் தினிக்கப்பட்டது. எந்த ஒரு நிறுவனமும் ஒரு காலாண்டுக்கு 03 மில்லியனுக்கு மேல் வருமானம்

இருந்தால் VAT வரி கட்டாயம் அறவிடப்பட வேண்டும். சம்மாந்துறை பிரதேச சபை 2004 ஆம் ஆண்டு 10 மாதம் VAT அறவீட்டுக்கு பதியப்பட்டிருக்கின்றது. கடைசியில் 2012 ஆம் ஆண்டு இதே எண்ணத்துடன் நான் அவர்களை சந்தித்து இது அரச நிறுவனம் என்ற படியினால் நீங்கள் கூறிய அநியாயமாக எடுக்கப்படும் VAT வரியினை முன்வைத்து பேசிக் கொண்டு அந்தக்காலத்தில் 02 வது காலாண்டு கட்டிவிட்டு நிறுத்திவிட்டோம். நான் சுற்றுநிருபம் வெளியிட்டேன் அறவிட வேண்டாம் என்று. அடுத்த நாள் எனக்கு அறிவித்தல் வந்தது அதனை விற்றோபண்ணிவிட்டேன். காரணம் இது சட்டத்துடன் தொடர்பு பட்டது.

நாம் 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு VAT கட்டாமல் இருக்கின்ற நேரம். 08 மில்லியன் ரூபா செலுத்தவேண்டிய பணம் வைப்பில் இருக்கின்றது. எந்த இடத்திலும் நாம் சட்டத்திற்கு முரணாக செயற்படக்கூடாது. சட்டங்களை வளைக்கலாம். முறிக்கக்கூடாது. VAT அறவீடு சட்டப்படி கட்ட வேண்டியது. ஆனால் எனக்கும் விருப்பமில்லை.

கிழக்கு மாகாண திருகோணமலை Town and gravels பிரதேச சபைக்குப் பிறகு அதிகமான வருமானம் உள்ள சபை சம்மாந்துறை பிரதேச சபை. நமது வரவு செலவுத்திட்டத்தில் 195 மில்லியன் வருமானம். அதனை மிகவும் அவதானமானக செலுத்துவதால்தான் அதனை இவ்வாறு செலுத்த முடியும்.

கௌரவ உறுப்பினர்களுக்கு என்னுடன் ஒரு மனவருத்தம் நான் லைட் போட்டுக்கொடுப்பதில்லை என்று. ஆனால் அது சபையின் செலவு. எந்த ஒரு சபையாலும் நாம் அலங்கரித்ததுபோல் அலங்கரிக்க வில்லை. மாநகர சபைகள்கூட அவ்வாறு லைட் போடவில்லை. வட்டைக்குள் யானை வருவெதென்றும் லைட் பூட்டியிருக்கின்றோம். அப்படியான சரித்திரமுள்ள சபைதான் நமது சபை. அண்மையில் பென் உறுப்பினர் என்னுடன் விவாதம் செய்தார் அது அவரின் ஆதங்கம்.

எனவே, வரி என்பதனை தவிர்க்க முடியாது. உண்மையாக சென்ற வாரம் செயலாளரும், நிதி உதவியாளரும் கொழும்பு போய் VAT Department Deputy Commisssioner சந்தித்து Panalty இல்லாமல் செய்தார்கள் இல்லாவிட்டால் Penalty உடன் 12 Million ரூபா செலுத்த வேண்டியிருக்கும். அது கட்டுபவர்களுகளுக்குத் தெரியும். இது நமக்கு தவிர்க்க முடியாத ஒரு விடயம். மற்ற சபையில் அறவிடாமல் கட்டாமல் இருக்கின்றார்கள் என்றால் வருமானம் அதற்கு குறைவாக இருக்க வேண்டும். அல்லது சட்டத்தை மீறி செயற்படுகின்றார்கள் அந்த நிலைக்கு நாம் வர முடியாது. மக்களுக்காக பிழையான விடயங்களைச் செய்ய முடியாது. காரணம் மீண்டும் மக்களிடம்தான் எடுத்து கொடுக்க வேண்டும். நாம் அதனை எடுக்காவிட்டால் அதனை சபைதான் கட்ட வேண்டும். அப்படிச் செய்ய முடியாது. இதனால் அதிகமாக பாதிக்கப்படுவது இறைச்சிக் கடைக்காரர்கள்தான். தன்னீர், கரன்ட் பில் போன்ற அனைத்திற்கும் வருகின்றது. இது நாட்டின் வரிச்சட்டம்.

2018 ஆம் ஆண்டு இறைச்சிக்கடை, Open Market டெண்டர் மூலம் 15.8 மில்லியன் வருமானம். நாம் எந்த வகையிலும் வருமானத்தை தவிர்க்க முடியாது. 70000 சனத்தொகை 134 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு போன்ற வற்றில் இருந்து கொண்டு வரி செலுத்தாமல் இருக்க முடியாது. வளத்தாப்பிட்டி மல்வத்தையில் உள்ள கனபதி புரம், தம்பிநாயகர் புரம், வள்ளுவர் புரம் என்று பல ஏரியாக்கள் இன்னும் பின்தங்கியே இருக்கின்றது. நமது பகுதியில் அனியாய புரம், பைனன்ட கட்டு தேன்பானை சென்னல்புரம் - 02 இல் உள்ள Transfomer இருக்கும் இடம் 40 வீட்டு திட்டம் போன்ற இடங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதற்கு வருமானம் வேண்டும். அதனைக் கூட்டும் போது வரி அறவீடு வரும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தப் பிரேரனைக்கான தீர்மானத்தை இன்றய தீர்மானமாக நிறைவேற்றாமல் இதனை அடுத்து வருகின்ற சபைகளுக்கு நாம் அனைத்து உறுப்பினர்களும் அது

தொடர்பான அறிவுரைகளைப் பெற்று வந்து ஒரு கலந்துரையாடல் மூலம் ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது தீர்மானமல்ல. இன்றுவரை அறவிட்ட கணக்கில் வருமான வரி திணைக்களத்திற்கு கட்ட வேண்டிய தொகையாக வங்கியிருப்பில் இருக்கும் 08 Million ரூபா தொகையைக் கட்டியே ஆகவேண்டும். இதில் நாம் வேறுபட்ட முடிவு எடுக்க முடியாது. எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி நாம் கலந்துரையாடலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்முனை முனிசிபல்கூட வரி அறவீடு செய்யவில்லை. எங்களது ஊரைச் சுற்றியிருக்கும் அனைத்து சபைகளும் இதனை செய்யாமல் இருக்கின்ற போது, நாம் மாத்திரம் இந்த ஏழை மக்களுக்கு வரி அறவிட வேண்டும். சபைக்கு வருமானம் வந்தாலும் பறவாயில்லை. ஆனால் நாம் அறவிட்டு அரசாங்கத்திற்கு கொடுக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அரசாங்கம் நமக்குத் தருகின்றது. இதில் அரசாங்கம் என்பது நாம்தான் குட்டி அரசாங்கம். நாம் மற்ற சபையின் கணக்காளர்களை எடுத்து ஒரு கலந்துரையாடல் செய்யலாம். எப்படித் தவிர்க்கலாம் என்ற நோக்கத்தில் பார்க்கலாம். ஆனால் அறவிட்டிருக்கின்ற தொகையைக் கட்டி நாம் அதற்குரிய வேலைகளைத் தொடர்ந்து செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு நான் கூறும் Proposal சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கம். அதாவது சம்மாந்துறையில் அனேகமான பெண்கள் விதவைகள், படித்து விட்டு வீடுகளில் வேலை வாய்ப்பின்றி காணப்படுகின்றனர். அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் இதனைக் கொண்டு வந்திருக்கின்றேன்.

இதன் அடிப்படை என்னவென்றால் நமது பிரதேச சபையில் அதிகமான பரப்புக் கூடிய நிலங்கள் காணப்படுவதனால் சம்மாந்துறையை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். எமது மண் வழம் இப்பயிற்சிக்கு பொருத்தமாக இருக்கும் என்பதனாலும் அவர்கள் நமது ஊரைத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அதற்கு நாங்கள் உதவ வேண்டும் என்ற என்னத்தில்தான் நான் இங்கு பேசிக் கொண்டிருக்கின்றேன்.

வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு பாரிய நிலப்பரப்பு வேண்டும். அந்த நிலத்தில் நாற்று மேடைகளை அமைக்க வேண்டும். அதே போல் Green House அமைக்க வேண்டும் என்பதற்காக நமது பிரதேச சபைக்குச் சொந்தமான நிலத்தை எதிர்பார்க்கின்றார்கள். அது மாத்திரமல்ல இத் திட்டத்தை நாம் பரிசோதனைக்காக 02 பள்ளிவாசல்களை தெரிவு செய்து அதன் கீழ் உள்ள பொருத்தமான மக்களை எடுத்து, அவர்களுக்கு நாற்று மேடைக் கன்றுகளை வழங்கி அதனூடாக அவர்கள் அதனை பராமரித்தல். உதாரணமாக ஒரு குடும்பத்திற்கு 05 கன்றுகளைக் கொடுத்து ஒவ்வொரு குடும்பத்தினரும் அதற்கு நீர் ஊற்றி அதனைப் பராமரிப்பதனூடாகவும், சம்மாந்துறையில் தொழில்நுட்பக் கல்லூரியில் Agriculture Level 05 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பயிற்சிக்காக நிந்தவூர், சம்மாந்துறை Agriculture Office போன்றவற்றுக்கு செல்கின்றார்கள். சிலர் போவதற்கு இடம் இல்லாமல் கஸ்டப்படுகின்றனர்.

அவர்களிடம் சென்று நான் கேட்டபோது அவர்கள் கூறினார்கள் இப்படியான பொது வேலைகள் செய்தால் நாங்களும் உங்களுக்கு பயிற்சியாளர்களை தருவோம் என்று கூறினார்கள். அதே போல் AO மஜீட் அவர்களிடம் இதற்கு உதவ முடியுமா? என்று கேட்டபோது அவர்கள் கூறினார்கள்

கண்டிப்பாக நாங்கள் சமூகத்தின் நலன் நோக்கி இதற்கு உதவுவோம் என்று கூறினார்கள். அதேபோல் நாங்கள் பிரதேச சபையின் சட்டத்தில் இருக்கின்ற 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் 19 வது சரத்தின் 17 வது பந்தியில் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கின்றது.

எனவே, இதன் நலன் கருதி இதற்கு அரசியல் எதுவுமின்றி, மக்களின் வாழ்வாதாரத்தை உயரத்துவதன் நோக்கமாகவும், பரிசோதனைக்காக இத்திட்டத்தை கொண்டுவந்திருக்கின்றேன். இன்ஷாஅல்லாஹ் இது நீண்ட திட்டமாகத்தான் காணப்படுகின்றது. தற்போது இல்லாவிட்டாலும் 06 மாத காலத்தின் பின் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே எமது மக்கள் சகாத், சதகா கொடுப்பவர்களாகத்தான் இருப்பார்கள், சகாத் வாங்குபவராக இருக்க மாட்டார்கள்.

ஆகவே, இப்பயிர்ச்செய்கையை செய்வதற்காக கோட்டிற்கு பின்புறத்தில் இருக்கின்ற பிரதேச சபைக்குச் சொந்தமான அரை ஏக்கர் நிலத்தை குறைந்த வாடகைக்கு இதனைத் தருமாறு சபையிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**தீர்மானம் 11**

நாற்று மேடைத் திட்டத்திற்கு நீர் நிலம் என்பவற்றை பங்காளியாக வழங்கும் வகையில் எலும்பு அரைக்கும் நிலத்தினை தற்காலிகமாக வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சுருக்கமாகச் சொன்னால் இது Home Garden Project இதில் வாடகைக்கு அப்பால் சபையும் பங்காளியாக இருந்து சபை நிலம். வெளிநபர்கள் அல்ல நமது மக்கள். அவர்கள் 02 மஹல்லாவில் உள்ள மக்களை எடுத்து அவர்களது நிலப்பரப்புக்கு எற்றமாதிரி கண்டுகளைக் கொடுத்து அதனை பராமரிப்பதற்கு வழங்கி அதனை இவர்கள் கண்காணிப்புச் செய்வார்கள். அதன் அறுவடை அதன் தேவைக்கு அப்பால் இருந்தால் அதனை வாங்கி சந்தைப்படுத்தலாம். அதனை ஒழுங்காக செயற்படுத்தப்பட்டால் நல்ல விடயம். அதற்கு ஊக்குவிப்பாக Proposal ஐ நாம் பாரமெடுக்கலாம். பள்ளிவாசல் ஊருக்குள் வருவதனால் விமர்சனங்கள் குறையும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இத்திட்டத்திற்கு அவர்களே வந்து வாடகை தந்து இதனை செயற்படுத்துவது நல்ல விடயம். நான் அனுபவத்தில் கூறுகின்றேன். மஹல்லாவாசிகள் ஒவ்வொருவரும் அவர்கள் முகம் கழுவும் நீரைக்கூட பயன்படுத்தினால் பிரயோசனமாகும். பள்ளிவாசலின் ஊடாக மக்களுக்கு மரங்கள் பற்றிய அறிவு ஊட்டவேண்டும். முதலாவது அறிவு ஆரம்பிப்பது மரத்தில் இருந்துதான். நாம் எல்லோரும் மரங்கள் நட வேண்டும். நாற்று மேடைத்திட்டத்திற்கு இதனை ஒதுக்கலாம். ஆனால் அவர்கள் வாடகை தர வேண்டும். அதே நேரம் ஊரின் வளத்தையும் அதிகரிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இரண்டையும் உள்வாங்கி நமக்கு 02 இடம் உள்ளது. Compost yad இலும் ஒரு பகுதி இருக்கின்றது. அதனையும் பாவிக்கலாம். இது ஒரு பாரிய பங்களிப்பு ஜனாதிபதி திட்டமும் இதுதான். சம்மாந்துறை பிரதேச சபையும் ஒரு பங்காளியாக சேர்ந்து Agriculture Department அனைவரையும் உள்வாங்கி அதனைச் செய்வோம். நாம் பங்காளியாக இருந்தால் பிரச்சினை வராது. தனியாக கொடுத்தால்தான் பிரச்சினை. சபைக்கும் பெருமை வேண்டும். இது சபையின் பொறுப்பில் ஒன்று. Mission இல் இதுவும் ஒன்று.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நன் இந்த நேரத்தில் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும். ''எல பௌஜன'' என்ற கட்டடத்தை கொண்டு வருவதற்கு சொற்ப நாட்களுக்குள் தவிசாளரிடம் இடத்தைக் கேட்டுக் கொண்டதற்கு தாமதமில்லாமல் உடனடியாக TO வுடன் இடத்தை சென்று பார்வையிட்டு அதற்கான Proposal ஐயும் தயாரித்து எவ்வளவு வேகமாக செய்ய வேண்டும் என்று அக்கரை செலுத்தி இடத்திற்குரிய ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்த தவிசாளர் அவர்களுக்கும், அதனோடு ஒத்துழைத்த பிரதேச சபை செயலாளர் அவர்களுக்கும், மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்களுக்கும் இந்த இடத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாகாண சபை தேர்தல் எல்லை நிர்னயம் சம்பந்தமாக வரைபு வரையப்பட்டு அதில் சம்மாந்துறை தொகுதிக்கும் ஒரு நிரந்தரமான பாதிப்பு ஏற்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் கடந்த 02 மாத கூட்டங்களுக்கு முன்னதாக இது சம்பந்தமாக கொண்டு வரப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினருக்கும் சிறு கட்சி தலைவர்களுக்கும் அது சம்பந்தமாக அறிவிப்பதாக சபைத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது தொடர்பாக என்ன நடை பெற்றிருக்கின்றது என்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் எதிர்வருகின்ற 24 - 26 வரையான காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் அது சம்பந்தமான விவாதத்தை உள்வாங்கி அதனூடாக வாக்கெடுப்பு எடுக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் அந்த விடயத்தை இந்த சபைக்கு நினைவு கூறுகின்றேன்.

ஏனென்றால் கண்டிப்பான முறையில் சம்மாந்துறை மாகாண சபை எல்லை நிர்னயத்தில் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றது. அது போன்று நாடுதளுவிய ரீதியில் முஸ்லிம் மக்களுக்காக ஒரு பாதிப்பான விடயமாகவும் கருதப்பட்டுக் கொண்டிருதுக்கின்றது. நமது 02 பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு நமது சபை Letter head இல் செல்கின்ற போது அவர்களுக்கும் இது உசாத்துனையாக அமைந்து விடும் எனவே, அந்த விடயத்தில் கௌரவ தவிசாளர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியவனாக,

சம்மாந்துறை நகர சபையாகவும் பிரதேச சபையாகவும் அடைகின்ற விடயம் சம்பந்தமாக கௌரவ தவிசாளர் அவர்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் என்னுடைய அறிவிற்கு எட்டிய வரையில் இறுதியாக நடந்த மஜிஸ் அஸ்ஷூறாவில் தீர்மானமாக சம்மாந்துறை ஒரு நகர சபையாகவும் பிரதேச சபையாகவும் மாற்ற முயற்சியெடுக்க தீர்மாணிக்கப்பட்டது. இதனை கௌரவ தவிசாளர் அவர்கள் அறிந்திருப்பீர்கள். அதனை நினைவு கூர்ந்தவனாக,

வாராந்த சந்தை தொடர்பாக, எமது செந்நெல் கிராமத்திலும் வாராந்த சந்தை தொடர்பாக சபைக்கு ஏற்கனவே முன்மொழிந்திருக்கின்றோம். அந்த விடயத்தையும் கௌரவ தவிசாளர் அவர்கள் விரைந்து கவனத்தில் கொள்ள வேண்டும். என்ற விடயத்தையும் நினைவு கூர்ந்தவனாக,

இன்று எங்களது கரையோரப் பிரதேசங்களில் யானைத் தொல்லைகள் அதிகரித்திருக்கின்றது. குடியிருப்பாளர்கள் கூட மிகவும் சிரமம்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பாக எங்களுக்கிருக்கின்ற முன்னனுபவங்களைப் பார்க்கின்ற போது IP ஜெமீல் அவர்கள் சம்மாந்துறைக்கு நிலையப் பொறுப்பதிகாரியாக இருக்கின்ற போது வனவிலங்குக்கு எதிராக சட்ட நடவடிக்கை கொண்டு வருகின்ற ஒரு சட்டத்திற்கு சென்றிருந்தார். ஏனென்றால் உங்களது கடமையை நீங்கள் சரியாக செய்வீர்களேயானால் காட்டு யானைகள் ஊருக்குள் வருகின்ற தேவை ஏற்படாது. என்ற விடயத்தை அவர் முன்மொழிந்திருந்தார்.

அந்த நேரத்தில் சட்டத்தரணி பாறூக் அவர்கள் மூலமாக நாங்கள் வனவிலங்குக்கெதிராக காலம் சென்ற முஸ்தபா மாஸ்ட்டர் தலைமையில் வழக்கு செய்யப்பட்டு அந்த வழக்கை கௌரவ சட்டமா அதிபர் அவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு என்று கூறி

கௌரவ சட்டமா அதிபர் கையகப் படுத்தி அதனை தொடர்ந்து எடுத்துச் செல்ல முடியாது என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. இப்போதும் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் அந்த வழக்கு இருக்கின்றது.

இங்கு என்னுடைய முன்னிலை என்னவென்றால் வனவிலங்கு சம்பந்தமாக அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்கின்ற போது அவர்களுக்கிருக்கின்ற ஆளணி குறைவா? வாகனக்குறைவா? தெரிய வில்லை எங்களுடைய தொலைபேசிகளுக்கு செவிமடுக்கின்ற கால அவகாசம் காணாமல் இருக்கின்றது. இதற்கு மாற்றமாக நாங்கள் இந்த சபையால் ஒரு முன்மொழிவை மேற்கொண்டு வனவிலங்கு காரியாலையம் ஒன்று உபகாரியாலையமாவது ஒன்று சம்மாந்துறையில் ஏற்படுத்தப்படுவதாக இருந்தால், மக்களுக்கு யானைத் தொல்லையால் ஏற்படுகின்ற ஆபத்துக்களை, அபாயங்களை குறைத்துக் கொள்ளலாம். என்ற ஒரு விடயத்தை கௌரவ தவிசாளர் அவர்களுக்கு முன்மொழிகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களில் முதலாவது முக்கியமானது உடனடியாக இன்று கடிதங்கள் தபாலில் இடப்பட வேண்டும்.

நகர சபை பிரதேச சபை என்பதற்கு எனது நிலைப்பாடு எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டில் இன்று அரச குழுவினால் ஊரைத் திருத்தும் பிரேரனை சட்டத்திற்கு முரணானது. அதனால் அதனை செயற்படுத்த முடியாது அப்படி அவர்கள் செயற்படுத்துவதனால் அதில் மாற்றம் செய்ய வேண்டும். மாற்றம் செய்யும் போது பிரதேச சபைக்கென்று இனங்காணப்படும் பகுதி ஒரு அர்தமில்லாத பிரிவாக வரும். கௌரவ உறுப்பினர் விரும்பினால் அதனைப்பற்றி ஆராய்ந்து நாம் ஒரு விசேடமான அமர்வுக்கு ஏற்பாடு செய்வோம். மஜிலிஸ் அஸ்ஸுறா முடிவு எடுத்தாலும் அரசாங்கம் அதனை சட்டத்திற்குள்தான் கொண்டு போகலாம். இதற்கு விதிமுறைகள் உள்ளது. அதனையும் நாம் கலந்துரையாடலாம்.

யானைத் தொல்லை பற்றி எல்லோரினதும் கட்டுப்பாட்டை மீறிய ஒரு விடயமாக போய்விட்டது. 40, 50 யானைகள் இன்று இந்தப்பகுதியில் உலாவுகின்றது. சபையில் அதனை தீர்மானமாக எடுத்து அரசாங்கம் இதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை இதனால் மக்கள் பாதிப்படைகின்றனர் என்ற தீர்மானத்தை எடுக்கலாம்.

**தீர்மானம் 12**
இன்று கட்டுப்பாடில்லாமல் விவசாய நிலங்களுக்கு மட்டுமல்ல குடியிருப்பு நிலங்களிலும் அத்து மீறி மக்களுக்கு பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற யானைகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரைக்குள் யானை போவதில்லை. யானை வேலி போடப்பட்டுள்ளது. ஆனால் பன்சலை ஓரம் பாடசாலை அன்மையில் Word of Bocrd க்குப் பக்கத்தில் யானை வேலி போட்டிருக்கின்றது. ஆனால் குளக்கரை ஓரமாக யானை செல்வதில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் இருந்து திட்டமிட்டு எங்களது பொருளாதாரம் அழிக்கப்படுகின்றது. காரணம் அறுவடை காலங்களில் மட்டும்தான் வருகின்றது. மற்ற நேரங்களில் அது கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்றுக் காரணம் என்ன? இதனால் மக்கள் காய்ப் பருவத்தில் கூட அறுவடை செய்கின்றனர். அது மட்டுமல்ல 1960ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி இலங்கையில் 25 மாவட்டத்தில் 6000 யானைகள் அதில் 3000 யானைகள் எப்படி விசேடமாக இந்தப்பிரதேசத்தில் தான் வருகின்றது. பலதரப்பட்ட நஸ்ட்டங்களை ஏனையவர்கள் திட்டமிட்டு பொருளாதாரத்தை சேதப்படுத்துகின்றனர். இந்த விடயத்திற்கு தீர்மானம் எடுக்க வேண்டும்.

எல்லை தொடர்பாக ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்து நாம் ஒரு தீர்மானத்தை முதல் எடுக்க வேண்டும். அதனை மற்ற சபைகளுக்கு சட்டரீதியாக பின்னர் அனுப்பிவைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.